# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.

## சிவலார்குளம் ஸ்டேடியத்தில் கோடை கால பயிற்சி முகாம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் கீழ் செயல்பட்டு வரும், சிவலார்குளம் SDAT விளையாட்டு அரங்கத்தில் கீழ்கண்ட விவரப்படி கோடை கால பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

## 5 நாட்கள் உலகத் திறனாய்வு திட்ட கோடை கால பயிற்சி முகாம்

இப்பயிற்சி முகாமானது **6,7,8** வகுப்புகள் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பிரத்யேகமாக **21.04.2017**முதல் **25.04.2017** வரை தினமும் மாலை **3.30** மணி முதல் **6.30** மணி வரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சி முகாமில் அடிப்படை விளையாட்டுத் திறன் Speed, Strength, Endurance, Flexibility and Combine Motor Qualities போன்ற அடிப்படை விளையாட்டு திறன்களை மேம்படுத்த அறிவியல் அடிப்படையிலான பயிற்சிகள் அளிக்கப்படும்.

## 15 நாட்கள் கோடை கால பயிற்சி முகாம் (அனைத்து வயதினருக்கும்)

இப்பயிற்சி முகாமானது அனைத்து வயதினருக்கும் **1.**தடகளம், **2.** இறகுப்பந்து, **3.** கூடைப்பந்து, **4.** குத்துச்சண்டை, **5.** கிரிக்கெட், **6.** கால்பந்து, **7.** வாள்சண்டை, **8.** ஜிம்னாஸ்டிக்ஸ், **9.**கைப்பந்து, **10.** ஹாக்கி, **11.** நீச்சல், **12.** டேக்வாண்டோ, **13.** வாலிபால், **14.** பளுதூக்குதல், **15.**கபாடி, **16.** மேசைப்பந்து, **17.** டென்னிஸ், **18.** ஜீடோ, **19.** ஸ்குவாஷ் மற்றும் **20.** வில்வித்தை ஆகிய விளையாட்டுக்களுக்கு பிரத்யேகமாக பயிற்சி முகாம் **21.04.2017** முதல் **05.05.2017** வரை நடைபெறவுள்ளது.

**இது சம்பந்தமான முன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் தலைமையில் சிவலார்குளம் SDAT ஸ்டேடியத்தில் வைத்து 05.04.2017 அன்று மாலை 3.30 மணிக்கு நடைபெற்றது.**

இப்பயிற்சி முகாமை தினமும் மாலை **3.30** மணி முதல் **6.00** மணி வரை நடத்துவதற்கும், மாணவ, மாணவியர்களுக்கு பால் அல்லது சத்தான உணவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமின் நிறைவு நாள் அன்று அனைவருக்கும் ஒரு டி–சர்ட் மற்றும் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. ஜான்சன் அரசு மேல்நிலைப்பள்ளி ஆலங்குளம், திரு. காஞ்சியப்பன் அரசு மேல்நிலைப்பள்ளி ஊத்துமலை, திரு.கு.முத்தையா அரசு மேல்நிலைப்பள்ளி மருதம்புத்தூர், திரு. மைக்கேல் சேசுராஜ் R.C. நடுநிலைப்பள்ளி ஊத்துமலை மற்றும் திரு. ராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.